

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியம், முசுண்டப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், நேற்று முன்தினம் (11.11.2024) விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (12.11.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள் /தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### "அரசு ஊழியர்கள் – ஆசிரியர்களுக்கு அதிக நிதி செலவிடப்படுகிறது" என்று கூறி கொச்சைப்படுத்தி – கிண்டலடிப்பது எடப்பாடி பழனிச்சாமியின் வாடிக்கையான கபடவேடம்!

# அரசு ஊழியர்களின் நலன் காப்பது - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான 'திராவிட மாடல்' அரசு!

## 1,73,000 அரசு ஊழியர்களை 'டிஸ்மிஸ்' செய்தவர்கள் நீலிக் கண்ணீர் வடிப்பதா? ஓர் விளக்க அறிக்கை!

சென்னை, நவ.13-

**அரசு ஊழியர்களின் நலன் காக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' அரசின் கொள்கைகளை விமர்சிப்பதும் ஆட்சியிலிருந்தபோது தடா, பொடா போன்ற சட்டங்களைப் போட்டு ஒரே நாளில், ஒரே கையெழுத்தில் 1,73,000 அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்ததுடன் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தும் கொடுமை செய்துவிட்டு, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுகிறது என்று கூறி கொச்சைப்படுத்தி - கிண்டலடிப்பது எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமியின் வாடிக்கையான கபட வேடம்!**

**இதுதொடர்பான ஒரு சிறப்பு செய்தித் தொகுப்பு வருமாறு :-**

2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ஆம் நாள் அப்போதைய முதலமைச்சர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒரு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் வாங்கும் ஊதியத்தைச் சொல்லி ஆசிரியர்களுக்கு இவ்வளவு சம்பளமா எனக் கூறி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைக் கேவலப் படுத்தினார். அவருடைய ஆட்சியில் போராடிய அரசு ஊழியர், ஆசிரியர்களைப் பார்த்து, "அதிக சம்பளம் வாங்கும் நீங்கள் போராடலாமா? என்று கேட்டு, ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் கொச்சைப்படுத்தினார் எடப்பாடி பழனிச்சாமி.

ஆனால், இன்றைக்கு அவர் எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருக்கிறார். இப்போது, ஆசிரியர், அரசு ஊழியர்களுக்காக இந்த அரசு எதுவும் செய்யவில்லை எனக் கூறி நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அரசு எல்லாக் காலத்திலும் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் போற்றிப் பாதுகாத்து வருகிறது. அரவணைத்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 19 ஆண்டுகால முதலமைச்சர் பொறுப்பில் 4 முறை ஊதியக் குழுக்களை அமைத்து ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியங்களை வழங்கி அரசு ஊழியர் ஆசிரியர்களின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளார். இதனை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நன்றாக அறிவார்கள். அதனால், அவர்கள் இந்த அரசுக்கு எப்போதும் ஆதரவாக இருக்கிறார்கள். ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு உதவ வேண்டும் என்பது பழனிச்சாமியின் நோக்கம் அல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர்கள் அளித்தும் வரும் ஆதரவைக் கண்டு பொறுக்கமுடியாமல் அதைக் கெடுக்க வேண்டும் என்று குள்ளநரித் தனமாக, நீலிக் கண்ணீர் வடிக்கிறார் என்பது ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு நன்றாகத் தெரியும்.

உலகில் எங்காவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஒரே ஒரு கையெழுத்தில் ஒரு இலட்சத்து 73 ஆயிரம் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் டிஸ்மிஸ் செய்தார்களே: வீடுகளில் இருந்த பெண்களைக்கூட பெண் பணியாளர்கள், பெண் ஆசிரியர்களைக்கூட வீடுபுகுந்து வந்து கைது செய்து சிறையில் அடைத்த கொடுமைகளை எல்லாம் எல்லோரும் அறிவார்கள். இதைச் செய்ததெல்லாம் அ.தி.மு.க ஆட்சிதானே அவர்கள் ஆட்சியில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட 1 இலட்சத்து 73 ஆயிரம் ஆசிரியர், அரசு ஊழியர்களுக்காக சென்னை உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் படிகள் ஏறி வழக்கு தொடுத்து அவர்கள் போட்ட டிஸ்மிஸ் உத்தரவை இரத்து செய்ய வைத்து அத்தனைபேரையும் மீண்டும் பணியில் சேரவைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

எப்போது போராட்டம் நடத்தினாலும், அவர்களைக் கைது செய்து வேலை நீக்கம் செய்வது அவர்களுக்கு வாடிக்கை.

ஒவ்வொரு முறையும் தி.மு.க. ஆட்சி அமையும் காலங்களில் பழிவாங்கப்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் தண்டனைகளை இரத்து செய்து மீண்டும் அவர்களுக்கு வாழ்வளித்து வந்துள்ளதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதனை யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. 1988 வரை குறைவான சம்பளம் பெற்று வந்த ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு இணையாக 1989இல் ஊதியங்களை உயர்த்தித் தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். இதைப்போல அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த காலங்களில் வழங்கிய சலுகைகள் குறித்து ஆண்டுவாரியாகக் காண்போம்.

ஆசிரியர்- அரசு ஊழியர்களுக்குக் கழக அரசு வழங்கிய சலுகைகள் 1968- உயர்கல்விக்கு ஊக்க ஊதிய உயர்வுகள்; 1969- ஈட்டிய விடுப்பை ஆண்டுக்கு 15 நாள் - ஒப்படை செய்து பணம் பெறும் திட்டம்; திருமணக் கடன், வாகனக் கடன், வீடு கட்ட கடன் வழங்கும் திட்டங்கள்; 1970- தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்; 1972- அரசு ஊழியர் இறந்தால் கருணை அடிப்படை நியமன முறை அறிமுகம்; 1973- 10 ஆண்டு பணி முடித்தால் தேர்வு நிலை (Selection Grade); 20 ஆண்டு பணி முடித்தால் சிறப்பு நிலை (Special Grade) பதவி உயர்வுகள் வழங்கும் திட்டம்;

1974- தமிழாசிரியர்களிடையில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற பாகுபாடுகள் நீக்கம்; பணியில் இருக்கும் ஆசிரியர் இறக்க நேர்ந்தால் நிதியுதவி வழங்கும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்;

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்க வகைசெய்திடும் 'தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம்' 1.12.1974 முதல் நடைமுறை;

1976- தமிழாசிரியர்கள் பெற்ற புலவர் பட்டயம் பி.லிட். பட்டமாக உயர்த்தப் பட்டது;

1989- ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதிய விகிதம்;

1990- பொங்கல் போனஸ்/கருணைத் தொகை;

1997 - முழு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகளுக்குப் பதில் 30 ஆண்டு பணிக் காலமே போதும் எனும் திட்டம் நடைமுறை;

ஓய்வு பெறும் நாளன்று பெறும் அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடு, அல்லது கடைசி 10 மாதகால சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையை 1.7.1996 முதல் ஓய்வூதியமாகக் கணக்கிடும் திட்டம் நடைமுறை; -என ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் பல சலுகைகளை வழங்கியது கழக அரசு.

அவற்றில் பல சலுகைகளை 2001-இல் அமைந்த அ.தி.மு.க. அரசு ரத்து செய்தது.

அதிமுக அரசு ரத்து செய்த சலுகைகள் அனைத்தையும் 2006 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று மீண்டும் அவற்றை நடைமுறைப்படுத்தினார்.

2006- அதிமுக அரசு 2003 ஆம் ஆண்டில் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திய அரசு ஊழியர் நியமனத் தடைச் சட்டம் "டெஸ்மா" 7.6.2006 அன்று ரத்து செய்யப்பட்டது.

2006- வேலை நியமனத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு அரசுப் பணியில் சேருவதற்குரிய உச்ச வயது வரம்பினை 17.7.2006 அன்று ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்பட்டது.

2006- அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 10.4.2003 மற்றும் 1.7.2003 முதல் 4.7.2003 வரையிலான நாட்களை, ஊதியமில்லா விடுப்பாக முந்தைய அதிமுக அரசு அறிவித்திருந்தது. அந்த நாள்களை ஊதியத்துடன் கூடிய பணிக் காலமாக ஏற்று 23.6.2006 அன்று ஆணை பிறப்பிக்கப் பட்டது.

2006- தலைமைச் செயலகப் பணியாளர்கள் மாலை நேரத்தில் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இடவேண்டுமென அ.தி.மு.க அரசு பிறப்பித்த ஆணையை கலைஞர் அரசு 23.6.2006 அன்று ரத்து செய்தது.

2006- அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட காலமான 23.10.2002 முதல் 1.11.2002 வரையிலான 10 நாள்கள் முந்தைய அரசினால் ஊதியமில்லாத காலமாக அறிவிக்கப்பட்டது. அந்த 10 நாள்களையும் ஊதியத்தோடு கூடிய பணிக்காலமாக 31.7.2006 அன்று உத்தரவிட்டது கலைஞர் அரசு.

1996- அரசு ஊழியர்கள் முழு ஓய்வூதியம் பெற தகுதியுள்ள பணிக்காலம் 33 ஆண்டுகள் என்பதை 30 ஆண்டுகளாகக் குறைத்து 1996இல் கழக அரசு நடைமுறைப்படுத்தியது.

2006 - கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது கடைசி 10 மாதங்களில் சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அதனை ஓய்வூதியமாக கணக்கிடும்

முறையை இந்த அரசு 31.7.2006 அன்று ஆணையிட்டு, மீண்டும் நடைமுறைப் படுத்தியது.

2007-இந்தச் சலுகையை 1.4.2003 முதல் 30.7.2006 வரை ஓய்வு பெற்றவர்களுக்கும், இறந்தவர் களுக்கும் வழங்கி 3.4.2007 அன்று ஆணையிடப்பட்டது.

2006- அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் என ஈட்டிய விடுப்பினைச் சரண் செய்து, பணமாக்கிக் கொள்ளும் திட்டம் 2006இல் மீண்டும் நடைமுறை

2006-அ.தி.மு.க. 30 ஈட்டிய விடுப்பு நாட்களைச் சரண்செய்து பணமாக்கிக் கொள்ளும் சலுகை

கழக அரசினால் 14.8.2006 அன்று மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1990- ஆண்டில் அன்றைய கழக அரசு, ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பொங்கல்

போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது;

2006- தலைமைச் செயலகப் பணியாளர்களை மாநிலம் எங்கும் மாறுதலில் அனுப்ப வகை செய்து

அ.தி.மு.க அரசு பிறப்பித்த ஆணை 18.12.2006 அன்று திமுக அரசால் ரத்து செய்யப்பட்டது.

19 ஆண்டுகளில் 4 ஊதியக் குழுக்கள் மூலம் அரசு ஊழியர், ஆசிரியர்கள்

பொருளாதாரத்தை உயர்த்திய கலைஞர்.

2.10.1970 முதல் மாநில அரசின் இரண்டாம் ஊதியக் குழு ஆண்டுக்கு 47 கோடி ரூபாய்

செலவு

1.6.1988 முதல் 5 ஆம் ஊதியக்குழு ஆண்டுக்கு ரூபாய் 443 கோடி செலவு

1.1.1996 முதல் ஆறாம் ஊதியக்குழு ஆண்டுக்கு ரூபாய் 1448 கோடி செலவு

1.1.2006 முதல் ஏழாம் ஊதியக்குழு ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 லட்சம் ரூபாய்ச் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த 4 ஊதியக் குழுக்கள் மூலம் அரசு ஊழியர், ஆசிரியர்களின் பொருளாதாரத்தை உயர்த்தியது முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசுதானே.

அதே வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் அரசு ஊழியர் ஆசிரியர்களின் நலன்களைப் பரிவோடு கவனித்து சலுகைகள் வழங்கி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்களால் மகளிர்க்கு மகப்பேறு விடுப்புக் காலம் 9 மாதம் என்பதை 12 மாதங்களாக உயர்த்தியுள்ளார்கள்.

அரசு பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பதை 40 விழுக்காடாக உயர்த்தியுள்ளார்கள்.

பழனிச்சாமி அரசு ஏற்படுத்திவிட்டு போன கடன்களால் ஏற்பட்ட கடுமையான நிதிநெருக்கடிகளுக்கு இடையிலும் எல்லோருக்கும் எல்லாவற்றையும் தடையின்றி நிறைவேற்றிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசு உயர்த்திவரும் அகவிலைப்படிகளை அவ்வப்போது தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளித்து வருகிறார்கள். என்பதுடன் அடுத்தடுத்து அவர்களுடைய கோரிக்கைகளும் அவர்கள் அனைவரும் மகிழும் வகையில் நிறைவேற்றப்படும்.

பழைய அரசு அலுவலர் குடியிருப்புகள் படிப்படியாக புதிதாகக் கட்டப்படும்.

அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீடுகட்டும் முன்பணம்

40 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது

ஓய்வூதியதாரர் இறக்க நேரிட்டால், குடும்ப உறுப்பினர்களுக்கு 'தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தில்' நிதியுதவியாக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 6.11.2024 அன்று கோயம்புத்தூரிலும், 10.11.2024 அன்று விருதுநகர் மாவட்டத்திலும் சிறப்பான முறையில் பணியாற்றிய அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நேரில் அழைத்து பாராட்டிச் சிறப்பித்தார்.

ஊரக வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வருவாய்த்துறை, கல்வித்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர் சங்க நிர்வாகிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

சமக்ர சிக்சா அபியான் திட்டத்திற்கு உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்காத நிலையிலும், 32,500 ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய ஊதியங்களை உரிய நாளில் வழங்கி பாதுகாத்துள்ளது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு.

எனவே, பழனிச்சாமி அவர்களின் நீலிக் கண்ணீர் நாடகம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களிடம் கடும் எதிர்ப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது எனில் அது மிகையல்ல!

### பட்டாசு விபத்து: குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என அறிவித்த

# தாயுமானவர் முதல்வருக்கு நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்!

### தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ. 13-

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் அமைப்புசாராத் தொழிலாக நடைபெற்று வரும் பட்டாசு தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் பலியாகி வருவதை பல ஆண்டுகளாக நாம் பார்த்து வருந்தியதுண்டு.

நெஞ்சை பிழிந்தெடுக்கும் இச்சம்பவங்களில் குழந்தைச் செல்வங்கள் தங்கள் பெற்றோரை அடையாளம் காண இயலாத வகையில் உடல்கள் சிதைந்து போன சம்பவங்கள் பல உண்டு. என்னதான் இழப்பீடுகளை வழங்கினாலும் "தாயுடன் அறுசுவையோம், தந்தையுடன் கல்விபோம்" என்ற பழமொழியை முறியடித்து இதோ நான் இருக்கிறேன்.



அக்குழந்தைகளுக்கான கல்வியை அரசே ஏற்கும் எனத் தாயுமானவராக இருந்து அக்குழந்தைகள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த கழகத் தலைவர் - தமிழக முதல்வர் அவர்களை என்ன சொல்லி பாராட்டுவது. எப்படி நன்றி சொல்வது என அகநெகிழ்ந்து, நெஞ்சம் நிறைந்து நல்வாழ்த்துக்களை தொ.மு.ச. பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் கழகத் தலைவர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்திற்கு தொண்டாற்றிட பாராட்டி மகிழ்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் நடந்த மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்களில் தீர்வு கண்டு 445 பயனாளிகளுக்குரூ.9.16 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றிய குழு தலைவர்கள் சி.பாஸ்கரன், அமுதா ஞானசேகரன், அணைக்கட்டு ஒன்றிய குழு துணை தலைவர் சித்ரா குமாரபாண்டியன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கிருஷ்ணமேனன், ராகப்பிரியா சீனிவாசன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் என்.பிரகாஷ், ஷோபனாசபரி நாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிட இன்று வருகை தரும்

# துணை முதல்வருக்கு எட்டயபுரத்தில் மாபெரும் வரவேற்பு!

### வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, நவ. 13-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (13.11.2024 - புதன்கிழமை) சென்னையிலிருந்து மதுரைக்கு விமானம் மூலம் வருகை தந்து அங்கிருந்து சாலை மார்க்கமாக தூத்துக்குடி வருகை தர இருக்கிறார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு முதன்முதலாக தூத்துக்குடி வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எட்டயபுரம் நான்கு வழிச் சாலை விலக்கில் மாலை



சுமார் 6 மணியளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அடுத்தநாள் 14.11.2024 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தூத்துக்குடி சத்யா ரிசாட்டில் நடைபெறும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக சார்பு அணி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். அதன் பின் காலை 10 மணியளவில் தூத்துக்குடி - எட்டயபுரம் சாலையில் உள்ள ஏ.வி.எம். கமலவேல் திருமண மண்டபத்தில் நடைபெறும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன் இல்லத் திருமண விழாவில் கலந்து கொள்கிறார்.

அதன்பிறகு பகல் 12 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டபணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தி அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிட இருக்கிறார்.

மாலை 4 மணியளவில் தி.மு.க பவளவிழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தூத்துக்குடி குறிஞ்சிநகர் மெயின் சாலையில் உள்ள மைதானத்தில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.

பிறகு மாலை 6 மணியளவில் தூத்துக்குடியில் இருந்து சாலை மார்க்கமாக மதுரை சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.

இருநாட்கள் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழக செயல்வீரர்கள், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.